FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

(Under Section 154 Cr.P.C.)

(தகவல் தொடர்பு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

29/08/26 8120392

1. District : திருநெல்வேலி மாவட்டம் PS: மூலை தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 07/2026 முத.அ. எண் Date: 28.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 7(a) r/w 106
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.08.2026 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.00 hrs to Time to : நேரம் வரை 15.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.2026 Time : நேரம் 13.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகம், மகாராஜநகர், திருநெல்வேலி மாநகரம். 3.5 கி.மீ கிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.தங்கராஜ், (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.T.மகாலிங்கம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27.03.1970 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு.S.S.முகமது கமால், த/பெ.ஷேக் அப்துல் காதர், உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர், திருநெல்வேலி மண்டலம். 2) திரு.முருகன், த/பெ.திரு.முத்துச்சாமி, கதவு எண்.181/49, முகில் வண்ணன் தெரு, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். 3) திரு.சந்திரசேகரன், த/பெ.திரு.ராமையா, கதவு எண்.1/57, மெயின் ரோடு, அரியநாயகிபுரம், கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம் மற்றும் 4) திரு.ஸ்ரீதர், த/பெ.திரு.ராமசாமி, கதவு எண்.38, 2-வது தெரு, சீனிவாசா நகர், சங்கர் நகர், திருநெல்வேலி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Does Not Arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Does Not Arise

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் — Does Not Arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 28.08.2026-ம் தேதி 13.00 மணிக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 27.08.2026-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் M.தங்கராஜ், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. பெறுனர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாநகரம், மகாராஜநகரில் அமைந்துள்ள திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக. திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை தாலுகா, மகாராஜநகர், 25-வது குறுக்கு தெரு, பிளாட் எண்.36-ல் தெற்கு பார்த்து அமைந்துள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed W.D. Robin Christy Singh Rank ...Inspector... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28.8.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

28/8/26.

15. Date & Time of despatch to the court: 28.08.26 14.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் E.MCCLARINE ESKHOL.
Rank: நிலை ADSP No. எண் YSAC
Tirunelveli.

கட்டிடத்தின் தரைதளத்தில் இயங்கி வரும் திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தென்காசி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மருந்தக உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான பணிகளுக்கு இடைத்தரகர்கள் மூலமாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் மேற்படி திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்தை 15.00 மணி முதல் 19.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலக உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநராக பணிபுரிந்து வரும் திரு.S.S.முகமது கமால் என்பவருடன் பேசிக் கொண்டிருந்த விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், முகில் வண்ணன் தெரு, கதவு எண்.181/49-ல் வசிக்கும் திரு.முத்துச்சாமி மகன் திரு.முருகன் என்பவரை சோதனை செய்த போது, அவரது சட்டையின் முன்பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.11,300/-ம், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, அரியநாயகிபுரம், மெயின் ரோடு, கதவு எண்.1/57-ல் வசிக்கும் திரு.ராமையா மகன் திரு.சந்திரசேகரன் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேண்டில் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.48,400/-ம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, சங்கர் நகர், சீனிவாசா நகர், 2-வது தெரு, கதவு எண்.36-ல் வசிக்கும் திரு.ராமசாமி மகன் திரு.ஸ்ரீதர் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் கத்தையாக பணம் ரூ.6,000/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.65,700/- மற்றும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், அவை தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை 27.08.2026-ம் தேதி 15.00 மணிக்கு ஆரம்பித்து 19.00 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே மேற்படி திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநராக பணிபுரிந்து வரும் திரு.S.S.முகமது கமால் மற்றும் மேற்குறிப்பிட்ட 3 நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் (M.தங்கராஜ்) துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி (28.08.2026) Sir, Received the complaint today on 28.08.2026 at 13.00 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.07/2026 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 r/w 106 BNSS on 28.08.2026 at 13.00 hrs Sd.E.Mcclarine Eskhol, ADSP, V&AC, Tirunelveli dt 28.8.26. Proceedings பின்வருமாறு:- 27.08.2026-ம் தேதி திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை தாலுகா, மகாராஜாநகர், 25-வது குறுக்கு தெரு, பிளாட் எண்.36-ல் தெற்கு பார்த்து அமைந்துள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கட்டிடத்தின் தரைதளத்தில் இயங்கி வரும் திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்தை திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் தலைமையில் திடீர்

சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : 1) திரு.M.தங்கராஜ், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். 2) திரு.E.மெக்லரின் எஸ்கால், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. இன்று 27.08.2026-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை தாலுகா, மகாராஜாநகர், 25-வது குறுக்கு தெரு, பிளாட் எண்.36-ல் தரைதளத்தில் இயங்கி வரும் திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர் மற்றும் அலுவலக ஊழியர்கள் தென்காசி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நான்கு தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மருந்தக உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான பணிகளுக்கு இடைத்தரகர்கள் மூலமாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், பெண் தலைமை காவலர் திருமதி.சமுத்திரக்கனி மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மதியம் சுமார் 14.30 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0990-ல் புறப்பட்டு பெருமாள்புரம், பாளையங்கோட்டை இரயில்வே பீடர் ரோடு வழியாக மகாராஜாநகர் வந்து மகாராஜாநகர், 25-வது குறுக்கு தெரு, பிளாட் எண்.36-ல் தரைதளத்தில் தெற்கு பார்த்து வாசல் கொண்ட வீட்டின் தரைதளத்தில் இயங்கி வரும் திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலக மெயின் கேட் வழியாக சுமார் 15.00 மணிக்கு உள்ளே வந்தும், தெற்கு பார்த்து வாசல் கொண்ட வரவேற்பு அறையில் வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபர்களிடம் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் திரு.S.S.முகமது கமால் என்பவரை விசாரணை செய்து மேற்படி அலுவலகத்தை திடீர் சோதனை செய்ய வந்த விபரம் குறித்து அவரிடம் தெரிவித்து, அவரை மேற்படி வரவேற்பு அறையின் மேற்குபுறம் உள்ள அவரது அறையில் உள்ள இருக்கையில் அமரச் செய்துவிட்டு, வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், முகில் வண்ணன் தெரு, கதவு எண்.181/49-ல் வசிக்கும் திரு.முத்துச்சாமி மகன் திரு.முருகன் என்பவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது சட்டையின் முன்பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.11,300/- இருந்தது. மேலும் அவரிடம் விசாரித்தபோது அவர் தான் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கரிவலம்வந்தநல்லூரில் முருகன் மெடிக்கல் என்ற பெயரில் மருந்தகம் நடத்தி வருவதாகவும், மேற்படி மருந்தகத்தின் மருந்தாளுநரின் பெயரை தனது மகன் அழகுசிவா பெயரில் மாற்றம் செய்ய மனு செய்திருந்ததாகவும், அது தொடர்பாக விசாரணை செய்ய மேற்படி அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். மேற்படியார் பணம்

வைத்திருந்தது தொடர்பாக விசாரித்த போது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.11,300/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் கையில் வைத்திருந்த பக்கம் 1 முதல் 56 வரையிலான விண்ணப்ப மனு கோப்பு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவர் அருகில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, அரியநாயகிபுரம், மெயின் ரோடு, கதவு எண்.1/57-ல் வசிக்கும் திரு.ராமையா மகன் திரு.சந்திரசேகரன் என்பவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்டில் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் கத்தையாக பணம் ரூ.48,400/- இருந்தது. மேலும் அவரிடம் விசாரித்தபோது அவர் தான் தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, அரியநாயகிபுரத்தில் சொர்ணா மெடிக்கல் என்ற பெயரில் மருந்தகம் நடத்தி வருவதாகவும், அதன் உரிமம் கடந்த 22.08.2026-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டதால், மேற்படி மருந்தகத்தின் உரிமத்தை புதுப்பிப்பது தொடர்பாக மேற்படி அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். மேற்படியார் பணம் வைத்திருந்தது தொடர்பாக விசாரித்த போது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.48,400/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் கையில் வைத்திருந்த பக்கம் 1 முதல் 14 வரையிலான விண்ணப்ப மனு கோப்பு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அவர் அருகில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, சீனிவாசா நகர், 2-வது தெரு, கதவு எண்.36-ல் வசிக்கும் திரு.ராமசாமி மகன் திரு.ஸ்ரீதர் என்பவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.6,000/- இருந்தது. மேலும் அவரிடம் விசாரித்தபோது அவர் தான் மதுரையில் உள்ள பிரமல் ஹெல்த் கேரின் புதிய கிளையை திருநெல்வேலி மாவட்டத்தில் துவங்குவது தொடர்பாக பதிவு சான்று பெற வேண்டி மேற்படி அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். மேற்படியார் பணம் வைத்திருந்தது தொடர்பாக விசாரித்த போது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.6,000/-ம், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் கையில் வைத்திருந்த பக்கம் 1 முதல் 78 வரையிலான விண்ணப்ப மனு கோப்பு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி வரவேற்பு அறையின் மேற்குபுறம் அமைந்துள்ள திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் திரு.S.S.முகமது கமால் என்பவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.500/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.500/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேலும் அவரது அறையின் இருந்த மற்றொரு மேஜையில் இருந்த சிறிய பையை சோதனை செய்ய அதில் MGM LIMON VODKA 750 ML என்ற மதுபானம் பயன்படுத்தப்பட்டு மீதி சிறிதளவு இருந்த நிலையில் அது மேற்படி அறையில் இருந்த கழிவறையில் கொட்டப்பட்டது.

மேற்படி வரவேற்பு அறையின் வடக்குபுறம் அமைந்துள்ள அலுவலக அறை-1 ல் மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட உதவியாளர் திருமதி.டெ.ஜெபா சைலஸ் என்பவரை பெண் தலைமை காவலர் திருமதி.சமுத்திரக்கனி என்பவர் உதவியுடன் சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது மணிபர்சில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.250/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.250/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி உதவியாளர் இருக்கைக்கு வடக்குபுறம் தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட அலுவலக உதவியாளர் திருமதி.எம்.கோமதி என்பவரை பெண் தலைமை காவலர் திருமதி.சமுத்திரக்கனி என்பவர் உதவியுடன் சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது ஹேன்ட் பேக்கில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,050/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,050/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அலுவலக அறை-1 ன் மேற்குபுறம் உள்ள அலுவலக அறை-2 ல் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட அலுவலக உதவியாளர் திரு.எஸ்.வனராஜ் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,200/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,200/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அலுவலக உதவியாளர் இருக்கைக்கு தெற்குபுறம் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட அலுவலக இளநிலை உதவியாளர் திரு.ஜெ.கௌதம் என்பவரை சோதனை செய்து அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல, அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை வாங்கி எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.1,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.1,000/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அலுவலக அறை எண்-1 க்கு வடக்குபுறம் உள்ள அலுவலக அறை-3 ஐ சோதனை செய்ய அதில் மூன்று மர மேஜைகள் நாற்காலிகளுடனும், ஒரு கணிணி மற்றும் பிரின்டர், கணிணி மேஜையுடனும் காணப்பட்டது. மேற்படி அறையில் உள்ள இருக்கைகள் குறித்து திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் திரு.S.S.முகமது கமால் என்பவரிடம் கேட்க, அவர் மேற்படி அறையை மருந்து ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருவதாகவும், தற்போது மருந்து ஆய்வாளர்களாக திருமதி.ஸ்ரீரேகா, திருமதி.பவித்ரா, திரு.சூர்யகுமரன், திரு.இராமச்சந்திரன் மற்றும் திருமதி.சீதா ஆகியோர்கள் பணிபுரிந்து வருவதாகவும் அதில் இன்று (27.08.2026-ம் தேதி) திருமதி.ஸ்ரீரேகா என்பவர் தற்செயல் விடுப்பில் இருப்பதாகவும், திருமதி.பவித்ரா, திரு.சூர்யகுமரன் மற்றும் திருமதி.சீதா ஆகியோர் முகாம் அலுவலில் இருப்பதாகவும், திரு.இராமச்சந்திரன் என்பவர் மாற்று பணியில் கன்னியாகுமரி மண்டல அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேற்படி அலுவலக அறை-3 ஐ சோதனை செய்ய அதில் பழைய ஆவணங்கள் மற்றும் கோப்புகள் காணப்பட்டது. மேலும் திருநெல்வேலி மண்டல உதவி மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் திரு.S.S.முகமது கமால் அவர்களிடம் அலுவலக பணியாளர்கள் வருகைப் பதிவேடு 2026 குறித்து கேட்க அவர் ஆஜர் செய்த பக்கம் எண்.1 முதல் 28 வரையிலான அலுவலக பணியாளர்கள் வருகைப் பதிவேடு 2026 விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (27.08.2026) மாலை 19.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். M.தங்கராஜ், திருநெல்வேலி துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் சிலர்.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli District and original FIR were sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tirunelveli and copies sent to concerned higher officials.

28/8/26
ADSP, VAC,
Tirunelveli.